**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS No. 135/2016**

04.04.2025

**<u>பி.வா.சா. 2 பிரகாஷ் த/பெ. செல்வநாதன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

வாதி வீடும் என் வீடும் மன்னார்குடி மேலவிழல்காரத்தெருவில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு வீடுகளும் கிழக்கு பார்த்த வீடுகள் ஆகும். என் தாயார் வசந்தா மாலங்கோ என்பவரிடமிருந்து கிரயம் பெற்றார். எனது தாயார் மாலங்கோ என்பவரிடமிருந்து 2 கிரய பத்திரம் மூலம் 4739 சதுர அடி கிரயம் பெற்றார். என் தாயாரின் பத்திரத்திலும் வாதியின் பத்திரத்திலும் காம்பௌண்ட் சுவர் பற்றி ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கிரயம் வாங்கியபோது எனக்கு வயது 15 அல்லது 16 வயது இருக்கும். அதனால் என் தாயார் அளந்து வாங்கினாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. காம்பௌண்ட் சுவர் எப்போது கட்டப்பட்டது என்றால் தெரியாது நாங்கள் 2000 தில் குடிவரும்போது காம்பௌண்ட் சுவர் இருந்தது. தெருபக்கத்திலிருந்து வீடு முடியும் வரை காம்பௌண்ட் சுவர் இருந்தது. கிழக்கு மேற்காக எவ்வளவு நீளத்தில் காம்பௌண்ட் சுவர் உள்ளது என்றால் சுமார் 40 அடியில் உள்ளது. என் வீட்டிற்கு முன்புறம் சாலை பின்புறம் வாய்கால் உள்ளது. என் வீட்டிற்கு வடக்கு தான் வாதி வீடு உள்ளது. நீதிமன்றம் மூலமாக ஆணையர் , சர்வேயர் வந்து அளக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடம் ஆகியவற்றை படித்து பார்த்தேனா என்றால் வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேன். 142 சதுர அடி ஆக்கிரமித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என்று என் வழக்கறிஞர் கூறினார். அதை மறுத்து நான் ஆட்சேபணை செய்துள்ளேன். ஆட்சேபணையில் என்ன சொல்லியுள்ளேன் என்று தற்போது ஞாபகமில்லை. முன்பு அளந்த அளவு சரியில்லை என்றும் மாவட்ட அளவையர் மூலமாக அளக்க வேண்டும் என்று நான் தாக்கல் செய்த ஆட்சேபணையில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. ஆட்சேபணையில் சொன்னது போல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**